**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**OS No.1/2021**

2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of PW.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னையா | தந்தை பெயர் | பெரியான் |
| கிராமம் | பல்லவராயன்பட்டி | தாலுகா | கந்தர்வகோட்டை |
| சமயம் | இந்து | ஜாதி | -- |
| வயது | 60 | தொழில் | விவசாயம் |

நாள் : 08.02.2024

வா.சா.3

<u>குறுக்கு விசாரணை</u>

1) என்னை சாட்சியாக இருக்க சொல்லி வாதி சுப்பையா என்னை நீதிமன்றத்திற்கு வர சொன்னார் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில், சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் வாதி சுப்பையா சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல, ஆனால் இதில் உள்ள விபரங்கள் சுப்பையா சொல்லி தான் தெரியும். என்னுடைய முதல் விசாரணையில், சொல்லியுள்ளது போல் ரெங்கசாமி மகன் கோவிந்தராஜ் வாதிக்கு ஆதரவாக சாட்சி சொல்லிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2) நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்க ளை வாதி அவருடைய வழக்குரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும், அவர் ராமச்சந்திரனுடைய இடத்தை வாங்குகிறார், வாங்கும் போது ராமச்சந்திரனும் சுப்பையனும் என்னிடம் பேசி, சுப்பையனிடம் பணம் வாங்கி ராமச்சந்திரன் கேட்டார்.

3) என்னுடைய முதல் விசாரணையில், நான் சொல்லியுள்ளவாறு ரூ. 2,00,000/-ம் மூன்று தவணையாக ரூ.1,00,000/- மற்றும் ரூ.50,000/- என்று இரு முறை செலுத்தியாக சொல்லியுள்ளேன். அந்த விபரம் கோவிந்தராஜனுக்கு தெரியுமா என்றால் தெரியும். நம்புரான்பட்டியில் உள்ள சொத்து, சுப்பையா மற்றும் ராமச்சந்திரன்-ன் தந்தை குட்டையக்கோனார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து பாகம் பிரிக்கப்படாத சொத்து என்றால் சரியல்ல, பாகம் பிரித்ததால் தான், ராமச்சந்திரன் விற்பதாக சொன்னார்.

4) ராமச்சந்திரன் சுப்பையாவிடம் எந்த தேதி, எந்த மாதம் ரூ.2,00,000/- பெற்றார் என்று குறிப்பிட்டு என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லியவாறு அவர் பணத்தை பெற்றுக்கொண்டுதற்கான எவ்வித ஆவணங்களையும் நானோ அல்லது வாதியோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், பத்திரம் எதுவும் எழுதி

வாங்கவில்லை. அவ்வாறு பத்திரம் எழுதி நானோ கோவிந்தராஜ்ம் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியிடம் இருந்து, பிரதிவாதி எந்த காலத்திலும் தனது பாகத்தை வைத்து, எந்த பணமும், ரொக்கமும் பெறவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி கூறிய வாக்குமூலம் வேறு என்றாலும் நான் என் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் வேறு என்றாலும் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.